[2015 செப்டம்பர் 29

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—தொடர்ச்சி

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பாசனத்திற்குத் தண்ணீர் வழங்க முடியாது என்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், கொஞ்சம் இருங்கள், சத்துணவு ஊழியர்கள் பிரச்சினையை நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அடுத்தது, உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புழல் சிறையில், கடந்த 25 ஆம் தேதி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜவாஹிருல்லா, நீங்கள் உட்காருங்கள். அடுத்தது நீங்கள் பேசலாம், கொஞ்சம் இருங்கள். இப்பொழுது உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், நீங்கள் உட்காருங்கள், நான் பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் சத்துணவு குறித்து பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். உங்கள் பெயரை நான் அதில் சேர்த்துக்கொள்கிறேன். இப்போது உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

(இ) சத்துணவு ஊழியர்கள் பிரச்சினை—தொடர்ச்சி

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை சந்திக்கவேண்டும் என்று பல மாவட்டங்களிலிருந்து. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசும்போது, நான் அதனை எடுத்துக்கொள்கிறேன். இப்போது எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)